# ஆயத்தமா? ஆயத்தமா?

ஆயத்தமா? ஆயத்தமா?
ஆயத்தமா? ஆயத்தமா?(2)

இரண்டாம் வருகைக்கு ஆயத்தமா
அவர் எப்போதும் வரலாம் ஆயத்தமா?(2)

மணவாட்டி போல நீ காத்திருந்தால்
அவர் நாமத்தை தினமும் போற்றியிருந்தால்(2)
மேகங்கள் மீதினில் வந்திடுவார் உன்னை
மோட்சதிற் அழைத்து சென்றிடுவார்(2)
புவியை வெறுத்திட ஆயத்தமா?
அந்த பரனை பற்றிக்கொள்ள ஆயத்தமா(2)

நேற்று வரைக்கும் நீ நன்மை செய்தும்
உன் பாவங்கள் இன்று தலை தூக்கினால்(2)
பரலோக கனவுகள் பாழாகுமே
உந்தன் பாடுகள் அனைத்துமே வீணாகுமே(2)
நேற்றை போல் இன்றும் நீ ஆயத்தமா?
அட இன்றை போல் நாளையும் ஆயத்தமா